<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.204/2025</u>

**<u>நாள் : 27.04.2026</u>**

**எ.ம.சா.** 1 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.திருமூர்த்தி | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.பிரகாசம் | வயது | : | 23 |
| ஊர் | : | ஆம்பூர் | தொழில் | : | உதவியாளர் |
| வட்டம் | : | ஆம்பூர் | தேசியம் | : | இந்தியன் |

1) நான் ஆம்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து ஆம்பூர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று 24.04.2026 தேதியிட்ட அதிகாரமளிப்பு கடிதத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். அதிகாரமளிப்பு கடிதம் **எ.ம.சா.ஆ.1.**, மேற்படி அழைப்பாணையில் பணிக்கப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

மேற்படி அழைப்பாணையில் நேரு, த/பெராஜா, 27, காந்தி ரோடு, 2வது லைன், கிருஷ்ணாபுரம், ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம் என்ற நபரின் ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. எங்களது அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை தேடிப்பார்த்ததில் நேரு என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இதுநாள் வரை வழங்கப்பட்டதாக தெரியவில்லை. வாகன விபத்தில் சம்பந்தப்பட்ட TN 83 Q 3535 என்ற யமஹா இருசக்கர வாகனமானது எங்களது அலுவலகத்தில் வைத்துதான் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி

ஆய்வின்போது யமஹா இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற நேரு என்பவரது ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவில்லை. மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் எ.ம..சா.ஆ.2

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எனது அலுவலகத்தில் உள்ள 2012 முதல் 2018 வரையிலான ஆவணக்கோப்புகளை தேடிப்பார்த்ததின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். 2013லிருந்துதான் ஆம்பூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் செயல்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். அதற்கு முன்பு வாணியம்பாடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டு வந்தது என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் திருப்பத்தூரிலும் வட்டார போக்குவரத்து அலுவலகமும் செயல்பாட்டில் இல்லை என்றால் சரிதான். மேற்படி நேரு, வாணியம்பாடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளரா என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நேருவின் இருப்பிட முகவரியானது மாறியிருக்கும் நிலையில் வேறு மாவட்டத்தில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலககத்திலும் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நான் ஆவணங்களை முறைப்படி பரிசீலிக்காமல் நேருவுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.